

தேவர் பிலிம்ஸ்

# தாய்க்குத் தலைமகன

டைரக்ஷன் · M.A.திருமுகம்

கதை,தயாரிப்பு சாண்டோ M.M.A.சின்னப்ப தேவர்

தேவர் பிலிம்ஸ்

# "தாய்க்குத் தலைமகன்"

நடிகர்கள் :

புரட்சி நடிகர்

**எம். ஜி. ராமச்சந்திரன்**

S. V. ரங்காராவ் - S.A. அசோகன் B.A. - நாகேஷ்

மனோகர் - சாண்டோ M.M.A. சின்னப்பா தேவர்

நடிகைகள் :

**ஜெயலலிதா - சௌகார் ஜானகி**

மனோரமா - S.N. லட்சுமி - பேபி R. கீதா

ராஜ்ஸ்ரீ (கௌரவ நடிகை)

மற்றும் தேவர் பிலிம்ஸ் குழுவினர்

வசனம் :

**ஆரூர் தாஸ்**

பாடல்கள் :

**கவிஞர் கண்ணதாசன்**

இசையமைப்பு :

**திரை இசைத் திலகம் K.V. மஹாதேவன்**

பின்னணி :

**T.M. சௌந்தரராஜன் - P. சுசீலா - L.R. ஈஸ்வரி**

ஒளிப்பதிவு டைரக்டர் :

**N.S. வர்மா B.Sc., C.P.**

கலை :

**A.K. பொன்னுச்சாமி**

டைரக்ஷன் :

**M. A. திருமுகம்**

கதை & தயாரிப்பு :

**சாண்டோ M. M. A. சின்னப்பாதேவர்**

ஸ்டுடியோ : வாஹினி

Recorded on "WESTREX" SOUND SYSTEM.

| | |
|---|---|
| எடிட்டிங் ... ... ... ... | M A. திருமுகம்<br>M.G. பாலுராவ் |
| ஒலிப்பதிவு .... .... ... | G.V. ரமணன் L.C. & S.E. |
| ,, உதவி ... ... | D. கன்னியப்பன், N.E. ஸ்ரீராம் |
| ஆபரேடிவ் காமிராமென் | H. அப்பா ராவ்<br>C.H யக்ஞ நாராயணன் |
| ஒளிப்பதிவு உதவி ... ... | K.S. ராவ், O. பிரபாகர், L.C. & S.E. |
| பாடல்கள் ஒலிப்பதிவு<br>& ரீ-ரிகார்டிங் ... ... ... | T.S. ரங்கசாமி (சாரதா) |
| செட்டிங்ஸ் ... ... ... | T. நீலகண்டன் |
| சீனிக் எபெக்ட்ஸ் ... ... | R. ஜெயராம ரெட்டி |
| மேக்கப் ... ... .... ... | A.V. ராமச்சந்திரன்<br>பீதாம்பரம், M. ராமசாமி<br>T.P. ஜெகதீசன், ரங்கசாமி<br>கோபால், பத்ரையா,<br>மோகன் ராவ் |
| உடைகள் ... ... ... ... | G. கிருஷ்ணசாமி, M.A. முத்து<br>ஸ்ரீனிவாசன், M.R. பாலன் |
| நடனப்பயிற்சி ... ... | T. தங்கப்பன் |
| சண்டைப் பயிற்சி ... ... | சியாம் சுந்தர் & பார்ட்டி |
| விளம்பரம் ... ... ... | எலிகண்ட் பப்ளிசிடீஸ் |
| விளம்பர டிசைன்கள் ... | R. நாகேஸ்வரராவ், G.H ராவ் |
| புகைப் படங்கள் ... ... | R.N. நாகராஜ ராவ் |
| அரங்க அலங்காரம் ... | சினிகிராப்ட்ஸ் |
| லேபரடரி & பிராஸஸிங் | விஜயா லேபரடரீஸ்<br>S. ரங்கநாதன் |
| ஸ்டூடியோ புரோக்ராம்ஸ் | C.S பிரகாஷ் ராவ், P. சுந்தரம்<br>B. ஜோஸப் |
| இசையமைப்பு உதவி ... | புகழேந்தி |
| விளம்பர மேனேஜா ... | S.R. ராமசாமி ஐயர் |
| ஆபீஸ் நிர்வாகம் .... ... | S.S. ராஜகோபால ஐயர்<br>A.K. சுப்பையா |
| கோவை ஆபீஸ் நிர்வாகம் | M.M.A. நடராஜன்<br>P.R பொன்னுச்சாமி தேவர்<br>P.S. ராமச்சந்திரன் |
| தயாரிப்பு நிர்வாகம் ... | M.A. மாரியப்பன் |
| புரொடக்ஷன்<br>மேனேஜர்கள் ... ... ... | S.M. கணேசன்<br>T.A. நடராஜ் |
| உதவி டைரக்ஷன் ... ... | பழனி, P.So. மாரிமுத்து<br>T. விஜயசிங்கம்,<br>P.A. அழகேசன் |

# தேவர் பிலிம்ஸ்

# "தாய்க்குத் தலைமகன்"

## கதைச் சுருக்கம்

ஒவ்வொரு பெண்ணுடைய வாழ்விலும் ஒரு கண்டம் இருக்கிறது. அதுதான் தலைப்பிரசவம்! அதில் சுகப் பிரசவம் ஏற்பட்டு, நல்லபடியாக ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்து விட்டால், அதுதான் அவளுக்கு மறுபிறவி! அப்படி நொந்து பெற்ற அந்தத் தலைப்பிள்ளை நல்லவனோ, கெட்டவனோ அவன்மீதுதான் — ஒவ்வொரு தாய்க்கும் அளவு கடந்த பாசம் இருக்கும், அதனால்தான் "தாய்க்குத் தலைமகன்" — "தாய்க்குத் தலைமகன்" என்று சொல்கிறார்கள்!

இது — தலைமகனைப் பெற்றெடுத்த ஒருதாயின் கருத்து!

இந்தக் கருத்தை வேலியாகக் கட்டி அமைக்கப்பட்டதுதான் இந்தக் 'கதைப் பூங்கா'!

அந்தக் குடும்பம், ஒரு அழகான பூந்தோட்டம்! அத்தனை மலர்களும் நறுமணம் பரப்பும் நல்ல மலர்கள்! அந்தத் தோட்டத்தில், அன்பு - பாசம் - காதல் - ஒற்றுமை ஆகிய மலர்கள் தெய்வீகத் தென்றலோடு சேர்ந்து சிரித்துக் கொண்டிருந்தன!

சிருஷ்டியின் மீது — அதன் கர்த்தாவுக்கே பொறாமை ஏற்பட்டதோ என — சீறி வந்தது ஒரு பொல்லாத புயல் அதன் விளைவு?.................

வெண்திரை பதில் சொல்லும்!

# பாட்டுகள்

## 1

இயற்றியவர் :
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்கள் :
T.M. சௌந்தரராஜன்
P. சுசீலா

ஆண் : பார்த்துக் கொண்டது கண்ணுக்கு கண்ணு !
பழகிக் கொண்டது நெஞ்சுக்கு நெஞ்சு !
பக்கமா நெருங்கவிட்டு
வெட்கமென்ன சொல்லடி சிட்டு

பெண் : பார்த்துக் கொண்டது கண்ணுக்கு கண்ணு !
பழகிக் கொண்டது நெஞ்சுக்கு நெஞ்சு !
கட்டழகன் கண்ணடி பட்டு
வெட்கத்தால் துள்ளுது சிட்டு !

ஆண் : கண்ணுலே மடக்கி விட்டு
பெண்ணுசை பெருக விட்டு
உன்னுசை மறைக்கலாகுமா ?.........

பெண் : கண்ணைத்தான் மறைத்துக் கொண்டேன்
என்னை நான் மறைக்கவில்லை !
இன்னும் நான் விளக்க வேண்டுமா ?.........

ஆண் : முந்தி முந்தி வரும் முத்துச் சிரிப்பினை —
சிந்தி வரலாமா ?.........

பெண் : சிந்திச் சிந்தி வரும் சித்திரப் பெண்ணுக்கு —
சொல்லித் தரலாமா ?.........

ஆண் : என்னென்ன நினைத்து வந்தேன்
எத்தனை எடுக்க வந்தேன் !
எல்லாமே மறந்து போனதே !

பெண் : கூறுங்கள் கேட்டுக்கொள்வேன்
கொஞ்சுங்கள் வாங்கிக் கொள்வேன்
நானுங்கள் சொந்தமல்லவா ?

ஆண் : என்ன என்ன இது கன்னி மனசுக்கு
இத்தனை எண்ணங்களா ?.........

பெண் : மெல்ல மெல்ல வந்து கன்னிப்பெண்ணினிடம்
இத்தனை கேள்விகளா ?.........

**இயற்றியவர் :**
கவிஞர் கண்ணதாசன்

**பாடியவர்கள் :**
**T.M.** சௌந்தரராஜன்
**P.** சுசீலா

பெண் : வாழ வேண்டும் ! மனம் வளரவேண்டும் !
—சுகம்
வாசல் தேடி வரவேண்டும் !

ஆண் : தாழம் பூ முடித்த கூந்தலோடு என்னைத்
தழுவிக் கொள்ள வரவேண்டும் ! வேண்டும் !
வேண்டும் !

ஆண் : கண்டாலும் ஆறாத உண்டாலும் தீராத
வண்டாக நான் மாற வேண்டும் !

பெண் : வண்டாக நீ வந்து உண்டாலும் தீராத
செண்டாக நான் மாற வேண்டும் !

ஆண் : செண்டோடு வண்டாடும் வேளையிலே—புதுக்
கண்ணோட்டமல்லவா தோன்றும் ?.........

ஆண் : பாலென்றும் தேனென்றும் ஊரார்கள்
சொல்லுவதை
என்னவென்று நாம் காண வேண்டும் !

பெண் : நான் ஒன்று நீ ஒன்று என்பதே இல்லாமல்
நாம் ஒன்று என்றாக வேண்டும் !

ஆண் : ஒன்றான பின்னாலே கேள்வியென்ன ? —இனி
ஊராரைக் கேட்கவா வேண்டும் ?........

இயற்றியவர் :
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர் :
P. சுசீலா

அன்னையென்று ஆகும் முன்னே
ஆராரோ பாட வந்தேன் !
என்னவென்று பாடுவேன் கண்ணே !—கண்ணே !
எந்த வார்த்தை கூறுவேன் கண்ணே !

முத்துச் சிப்பிக் கன்னத்திலே
முத்தமிட்டு முத்தமிட்டு
சித்திரங்கள் போடவா ?.........
செவ்விதழை மூடவா ?.........

தெள்ளு தமிழ்ச் சோலையிலே
தெள்ளித் தெள்ளி அள்ளிவந்த
பிள்ளைத் தமிழ் பாடவா கண்ணு !—கண்ணு !
பேசும் தமிழ் பேசவா கண்ணு !

மஞ்சத்திலே சாய்ந்து கொண்டு
மார்பில் உன்னைத் தழுவிக் கொண்டு
நெஞ்சில் வைத்துப் போற்றுவேன்
நேரம் வேறு ஆனதே !

பக்கம் வரப் பாதையில்லை !
பால் கொடுக்கும் நிலையுமில்லை !
வெட்கம் வரும் வேளையல்லவா ?—கண்ணு !
விழிகள் பேசும் நேரமல்லவா ?.........

ஆரிரோ ! ஆரிரோ !.........

இயற்றியவர் :
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர் :
L.R. ஈஸ்வரி

அந்திக்கு மேலே — இந்த நிலாவை
சந்திக்கலாமா ? ஐயா யாயா !
சந்திக்கும்போது ஒன்றுவிடாமல்
சிந்திக்கலாமா ? அம்மா மாம்மா !

உன்னோடு என்னைக் கண்ட போது
உண்டான எண்ணம் என்ன கூறு !
கண்ணோட்டமா ? வெள்ளோட்டமா ?
காணாத களியாட்டமா ?

துள்ளட்டும் தேனூற்று வெள்ளம் !
அள்ளட்டும் தேறாத உள்ளம் !
மின்னட்டும் பூவான கன்னம் யாய்யா
யாய்யயா !

எங்கே இது ? இல்லாதது ?
எந்நாளில் சொல்லாதது !.........

**5**

| இயற்றியவர் : | பாடியவர் : |
|---|---|
| கவிஞர் கண்ணதாசன் | **T.M.** சௌந்தரராஜன் |

தாய்க்குத் தலைமகன்
தாயை மறந்தாலும்
தனிப்பாசம் கொண்டிருந்த
தாய் அவனை மறக்கவில்லை !

தாய்க்குத் தலைமகன்
தான் பிரிந்தான் என்றவுடன்
தாயும் பிரிந்து விட்டாள் !
தனித் தெய்வமாகி விட்டாள் !

தெய்வமே ! எங்கள்
திருவிளக்கே ! குலத்தவரை
காத்தருள்வாய் தாயே !
காத்தருள்வாய் தாயே !

TAS அச்சகம், சென்னை-7. போன் : 63012


தேவர் பிலிம்ஸ்
தாய்க்குத் தலைமகன்